بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**இடம் : பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல் – இலண்டன்**

September 6 2013

**தமிழாக்கம் : மவ்லவி M. ரஃபீக் அஹ்மது சாஹிப்**

## U.K. ஜல்ஸா ஸாலானா 2013 - ஒரு கண்ணோட்டம்

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்ஹம்துலில்லாஹ்! இந்த வருடம் மீண்டும் அல்லாஹ்வின் அருளால் U.K.–ன் ஆண்டு மாநாடு தனது எல்லா விதமான அருள்களுடனும் நன்றி செலுத்துதல் என்ற கருத்தை மேலும் மெருகூட்டியவாறு கடந்த ஞாயிறன்று முடிவடைந்தது. அல்லாஹ்வின் அருள்களின் காட்சிகளை ஒவ்வொருவரும் பார்த்தனர்; உணர்ந்தனர். மாநாட்டுத் திடலில் அமர்ந்திருந்தவர்களும், உலகில் எங்கேயாவது இருந்து கொண்டு M.T.A.மூலமாக மாநாட்டைப் பார்த்தவர்களும், பிறகு M.T.A. தவிர Internet Streaming மூலமாக ஏறக்குறைய ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்த்துள்ளனர். இது அல்லாஹ்வின் எண்ண முடியாத அருள்களாகும். இந்த புதிய வழிமுறைகள் மூலமாக உலகிலுள்ள இலட்சக்கணக்கான மக்களால் மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்க்க முடிகின்றது; கேட்க முடிகின்றது.

ஆண்டு மாநாட்டிற்குப் பிறகு ஜமாஅத் சகோதரர்கள் மாநாடு தொடர்பாக கூறியுள்ள கருத்துக்கள், வாழ்த்துக்கள் ஆகியவற்றின் தொடர் நீடித்துக் கொண்டே செல்கிறது. நாள்தோறும் பல கடிதங்கள் எனக்கு வருகின்றன. கடிதம் எழுதுகின்ற பலரும் நாங்கள் மிகத் தொலைவில் அமர்ந்தவாறு நாங்களும் மாநாட்டில் நேரடியாக கலந்து கொள்வதாக உணர்கின்றோம். மாநாடு முடிந்த பிறகு துக்கம் எங்களை ஆட்கொண்டு விட்டது என்று எழுதுகின்றனர். இந்த அஹ்மதிய்ய உலகமும் வியப்பான உலகமாகும். அதன் மனத்தூய்மையும், பற்றும் முற்றிலும் தனித்தன்மை கொண்டதாகும். இந்த மனத்தூய்மை மற்றும் பற்றானது அந்நியர்கள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பல விருந்தினர்கள் கூறியுள்ள சில கருத்துக்களை உங்களுக்கு கூறுகின்றேன்.

சில கண்ணியமிக்க விருந்தினர்கள் மாநாட்டு மேடைக்கு வந்து தமது கருத்துக்களை எடுத்துக் கூறுயதை நீங்களும் கேட்டுள்ளீர்கள். எவ்வாறு உலகில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் திகிலை அல்லாஹ் நிலைநாட்டியுள்ளான் என்பதை நீங்கள் கேட்டீர்கள். வெளிப்படையாகப் பார்க்கும் போது உலக அளவில் பலவீனமான ஜமாஅத்தாக இது இருக்கின்றது. ஆனால் கிலாஃபத்தின் சரடில் கோர்க்கப்பட்டிருப்பதால் ஒரு கட்டுப்பாட்டிற்குள் இருப்பதால் பெரும் பெரும் தலைவர்கள் இங்கு வருகை தந்து நாங்கள் வந்திருப்பது எங்களுக்கு பெருமையைச் சேர்க்கின்றது. அதற்காக நாங்கள் ஜமாஅத்திற்கு நன்றி செலுத்துகின்றோம் என்று கூறியுள்ளனர். பலரும் இங்கு வந்தனர். அவர்களுக்கு இங்கு மேடையில் தங்களது கருத்துக்களைக் கூறுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. சிலர் தங்களது தூதுச் செய்தியை அனுப்பி இருந்தனர். ஆனால் அவர்களது உள்ளத்தின் நிலைமையை அவர்கள் பிறகு வெளிப்படுத்திக் காட்டினார்கள். அதில் எந்த செயற்கைத் தன்மையும் இருக்கவில்லை.

உதாரணமாக, இங்கு பெனினுடைய Supreme Court –ன் Chief Justice வந்திருந்தார். அவர்கள் இங்கும் தமது கருத்துக்களைக் கூறியிருந்தார்கள். இவர் Francophone நாடுகளின் Supreme Court Association –ன் தலைவரும் ஆவார். இந்த Association –ல் ஆப்பிரிக்காவின் 58 நாடுகள் இருக்கின்றது. இவர் அமைச்சராகவும் இருந்துள்ளார். இவர் தமது கருத்துக்களை மாநாட்டில் பணிபுரிந்தவர்களுக்கு நன்றி செலுத்தியவாறு இவ்வாற கூறுகின்றார்:

முதலாவதாக, நான் அந்த இளைஞர்களுக்கும், சிறுவர்களுக்கும் நன்றி செலுத்துகின்றேன். இவர்கள் இரவு, பகலாக மனத்தூய்மையுடனும், உழைப்புடனும், நேசத்துடனும் பணியாற்றுவதை நான் பார்த்தேன். எல்லாரது முகத்திலும் புன்சிரிப்பு மலர்ந்திருப்பதை நான் பார்த்தேன். இவ்வளவு பெரிய மாநாட்டில் எந்தவொரு அசம்பாவிதமான சம்பவமும் நடக்கவில்லை. ஒவ்வொரு விசயமும் மிகவும் சிறப்பாக இருந்தது. ஒழுங்குமுறையின் உயர்வான முன்மாதிரியாக அது இருந்தது. நான் இந்த மாநாட்டிலிருந்து கலப்பற்ற மனத்தூய்மையையும் ஆன்மீகத்தையும் கொண்டு செல்கின்றேன்.

மனத்தூய்மை மற்றும் ஆன்மீகத்தின் உயர்வான முன்மாதிரி அஹ்மதிய்யத்தின் சிறப்பம்சமாகும். இந்த சுற்றுச்சூழலைப் பார்த்து நான் முஸ்லிமாக இருப்பதில் பெருமை அடைகின்றேன்.

இவர் கூறுகின்றார்: மாநாட்டில் அதிகமான நபர்கள் கலந்து கொண்ட பிறகும் ஏற்பாடுகள் மிகவும் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் ஒழுங்குமுறையைப் பேணியும் இருந்தது. இந்த மாநாட்டில் ஒவ்வொரு சமுதாயத்தைச் சேர்ந்த உள்ளூர் வாசிகளிலிருந்தும் வெளிநாட்டைச் சார்ந்தவர்களிலிருந்தும் எத்தகைய மக்கள் வந்திருந்தனர் என்றால் அவர்கள் சமுதாயத்தில் உயர் தகுதி உடையவர்களாக இருந்தனர். மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட எல்லா சொற்பொழிவுகளும் மிகவும் சிறந்த முறையில் அமைந்திருந்தது. பிறகு இவர் தமது நாட்டிற்கு அதாவது பெனினிற்கு திரும்பிச் சென்ற பிறகு அங்கு அவர் விமான நிலையத்தில் வைத்து V.I.P Launch –ல் Print Media உடைய பிரதிநிதிகள் கலந்து கொண்ட Press Conference –லும் இவர் தமது கருத்தை வெளிப்படுத்திக் கூறினார். இது அங்குள்ள தேசிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டிருந்தது. அவர் கூறிய விசயம் இதுவாகும்.

அஹ்மதிய்யா ஜமாஅத் இலண்டனுக்கு வெளியே 120 ஏக்கர் நிலத்தில் (இது அவர் கூறியதாகும். ஆனால் ஹதீகத்துல் மஹ்தி இருக்கின்ற நிலம் 208 ஏக்கர் ஆகும்.) அவர்கள் தமது நகரத்தை குடியமர்த்தியுள்ளனர். அங்கு மனிதர்களுக்கு தேவைப்படுகின்ற ஒவ்வொரு பொருளும் கிடைக்கும். அங்கு பணியாற்றுகின்ற இளைஞர்களும், சிறுவர்களும், மற்ற அனைவரும் மிகுதியாக உழைத்து ஏற்பாடுகள் செய்திருப்பது தெரிய வந்துள்ளது. விருந்தினர்களுக்கு தொண்டு செய்யும் உணர்வுகளால் நிரம்பி காணப்பட்ட இத்தகைய ஒழுங்குமுறையைப் பேணுகின்ற ஜமாஅத்தை இதற்கு முன்னர் ஒருபோதும் நான் கண்டதில்லை. ஏதாவதொரு விருந்தாளிக்கு என்ன பொருள் தேவைப்பட்டாலும் உடனடியாக அந்த விருந்தாளியின் தேவையை அவர்கள் நிறைவேற்றி விடுவார்கள். அவ்வாறே ஏதாவதொரு இளைஞரிடம் நாம் ஒரு தேவையைக் கூறும் போது நாம் கேட்கும் பொருளுடன் அவருக்கு எவ்வித தொடர்பும் இல்லாமல் இருந்தாலும் அதனோடு தொடர்புடைய துறைக்கு அதுபற்றி தெரிவித்து உடனடியாக அது கிடைப்பதற்கான ஏற்பாட்டை செய்து விடுகின்றார்கள்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: மாநாட்டின் போது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் சொற்பொழிவு நிகழ்த்தும் போது, சபையில் எவரும் பேசுவதை என்னால் பார்க்க முடியவில்லை. 31,000ற்கும் அதிகமான மக்கள் அங்கு இருந்தனர். அவ்வாறிருந்தும் அங்கு அமைதி நிலவியது. இது வியக்கத்தக்க காட்சியாக இருந்தது. இதனை ஒருபோதும் என்னால் மறக்க முடியாது.

**பிறகு இதே Press Conference -ல் அவர் கூறுகின்றார்:**

மாநாடு முடிந்ததும் எங்குமே ஒருவர் மற்றவரைத் தள்ளுவது, முந்திச் செல்வது ஆகியவற்றைப் பார்க்க முடியவில்லை. எல்லாருமே மிகவும் அமைதியுடன் ஒருவர் பின்னால் மற்றொருவராக சென்று கொண்டிருந்தனர். எவருடைய கை முட்டாவது மற்றவர் மீது பட்டு விட்டால் அல்லது ஒருவரது பாதம் மற்றவரது பாதத்தின் மீது பட்டு விட்டால் அவர் உடனடியாக அதற்காக மன்னிப்புக் கேட்கின்றார். சிறு சிறு விசயங்களுக்காக கூட ஒருவர் மற்றவரிடம் மன்னிப்புக் கேட்கின்றனர். இந்தக் காட்சியை இதற்கு முன்னர் நான் ஒருபோதும் கண்டதில்லை.

பிறகு கூறுகின்றார்: 31,000 பேரும் ஒருவர் மற்றவருடன் சேர்ந்து இருக்கின்றார்கள்; உணவருந்துகின்றனர். எல்லாவற்றிற்கும் அங்கேயே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளிலிருந்தும் அமைச்சர்களும் உயர் கல்வி கற்றிருப்பவர்களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். இது படித்தவர்களின் ஜமாஅத்தாக இருக்கின்றது என்பதற்கான ஆதாரமாக இது இருக்கின்றது.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: நமது நாடு முன்னேற்றமடைய வேண்டுமென்றால் இந்த ஜமாஅத்தின் தொண்டுகளின் காரணமாகத்தான் முன்னேற்றம் அடைய முடியும். நான் பெனினிலுள்ள மக்களுக்கு மட்டுமல்லாமல் முழு இஸ்லாமிய உலகிற்கும் இதை கூறுகின்றேன். எல்லாரிடமும் சமமாக நடந்து கொள்வதை அஹ்மதிய்யா ஜமாஅத்திடம் இருந்து கற்றுக் கொள்ளுங்கள். எதிர்ப்புகள் பற்றிய சில சம்பவங்கள் எனக்கு தெரிய வந்தது. பெனினிலுள்ள மக்களிடம் நான் கூறுகின்றேன். இவர்களை எதிர்ப்பதை விட்டு விட்டு இவர்களிடமிருந்த இஸ்லாத்தை கற்றுக் கொள்ளுங்கள். பெனின் தொடர்பாகவும் நான் கூறி விடுகின்றேன். இங்குள்ள சில பகுதிகளில் எங்கு ஜமாஅத் விரைவாக முன்னேறி வருகிறதோ அங்கு அதிகமாக எதிர்ப்பு இருந்து வருகிறது.

கூறுகின்றார்கள்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபாவிற்கு ஒரேயொரு விருப்பம்தான் இருக்கின்றது. அது உலகில் அமைதி நிலைநாட்டப்பட வேண்டும் என்ற விருப்பமாகும்.

பிறகு கூறுகின்றார்கள்: மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் எவ்வாறு கலீஃபாவிடம் நேசம் கொள்வதை நான் பார்க்கின்றேனோ அவ்வாறே அவர்களது கலீஃபாவும் அவர்களிடம் அன்பு காட்டுவதை நான் பார்த்தேன். தங்களது

கலீஃபாவின் மீதுள்ள அன்பில் மக்கள் அழுவதை நான் பார்த்தேன். எவ்வளவு வியக்கத்தக்க ஆன்மீகக் காட்சியாக அது இருந்தது? அதனை எனது வாழ்நாளில் என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. இது ஒருவரது கருத்தாகும்.

பிறகு தமீபாபியா திரீஸ் சாஹிபா, புர்கினோஃபாஸோவிலிருந்து வந்து மாநாட்டில் கலந்த கொண்டார்கள். புர்கினோஃபாஸோவின் Print Media மற்றும் Electronic Media –விற்கான Higher Authority Commission –ன் தலைவியாக இவர் இருக்கின்றார். இரண்டு முறை நாட்டின் Federal Minister ஆக இவர் இருந்துள்ளார். இதை தவிர இத்தாலியிலும் ஆஸ்டிரியாவிலும் 14 வருடங்கள் வரை புர்கினோஃபாஸோவின் தூதுவராக இவர் இருந்துள்ளார். மேலும் U.N.O.–வில் தனது மாநாட்டின் பிரதிநிதியாகவும் இவர் இருந்துள்ளார்.

இவர் கூறுகின்றார்: இந்த மாநாட்டில் கலந்து கொள்வது எனது பார்வையில் எனது வாழ்வின் முதல் நிகழ்வாக இருக்கின்றது. நான் ஐக்கிய நாட்டு சபையிலும் எனது நாட்டின் பிரதிநிதியாக இருக்கின்றேன். நான் பல நாடுகளின் பிரதிநிதிகளைப் பார்த்துள்ளேன். ஆனால் இந்த மாநாட்டிலும் 80க்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். எல்லாரும் ஒரே சரடில் கோர்க்கப்பட்ட முத்துக்களின் மாலையாக இருந்தனர். கருப்பர், வெள்ளையர், ஆங்கிலேயர், ஃபிரெஞ்சுக்காரர் என்று எவரும் தனியாக தென்படவில்லை. நிற, இன பாகுபாடின்றி ஒவ்வொரு அஹ்மதி முஸ்லிமும் தனது கலீஃபாவின் பேரன்பராக இருப்பது தெரிய வந்தது.

பிறகு கூறுகின்றார்கள்: எல்லாவற்றையும் விட அதிகமாக நான் தாக்கத்திற்கு ஆளான விசயம் ஒவ்வொரு நபரும் இறைவனுக்காக ஒரு Commitment உடன் இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருக்கின்றார். எல்லாரும் விருந்தினர்களாகவும், அதே நேரத்தில் விருந்தோம்பல் செய்பவர்களைப் போன்றும் தோன்றுகிறது. ஆண்கள், பெண்கள், சிறியவர், பெரியவர் என எல்லா நபர்களுமே விருந்தோம்பல் செய்வதற்காக ஆஜராகி இருந்தார்கள். இவர்களது அன்பு பிறருக்கு காட்டுவதற்காக இருக்கவில்லை. மாறாக, அது உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்பட்டது.

பிறகு பெண்களை ஆண்களை விட்டும் தனியாக ஓரிடத்தில் பார்த்தது நான் வியப்படையக் காரணமாக இருந்தது. இங்குள்ள பெண்களுடனும் ஏனைய முஸ்லிம்களுடன் நடந்து கொள்வதைப் போன்றே இவர்களும் நடந்து கொள்கின்றனர் என்று எனக்கு தோன்றியது. ஆனால் நான் இந்தப் பெண்களுடன் சேர்ந்து இருந்த போது சிறிது நேரத்திலேயே என்னுடைய இந்தக் கருத்தில் மாற்றம் ஏற்பட்டு விட்டது. நான் பார்த்த போது புகைப்படம் எடுப்பவரும் பெண்ணாக இருந்தார். கேமராவையும் பெண் தான் இயக்கிக் கொண்டிருந்தார். வரவேற்கின்ற இடத்திலும் பெண்கள் தான் இருந்தனர். உணவு பரிமாறுபவர்களும் பெண்களாகத்தான் இருந்தார்கள். சுருக்கமாக ஒவ்வொரு வேலையையும் பெண்கள் தான் செய்து கொண்டிருந்தனர். பெண்கள் பர்தா அணிவது ஒருபோதும் அவர்களது சுதந்திரத்தை அழித்து விடாது என்பது உண்மையாகும். எவருக்காவது இதில் உறுதி ஏற்படவில்லையென்றால் அஹ்மதிகளிடம் வந்து அவர் அதை பார்க்கட்டும்.

பிறகு கூறுகின்றார்: நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் அலுவலகத்திற்குச் சென்ற நேரத்தில் இவ்வளவு சிறிய அலுவலகம் உலகின் பார்வையை தன் பக்கம் ஈர்க்கக்கூடியதாக இருக்க முடியுமா? என்று நான் வியந்தேன்.

பிறகு கூறுகின்றார்: ஆண்களின் அரங்கில் அமர்ந்தவாறு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவைக் கேட்பதற்கான நல்வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவர்கள் வரும்போது எல்லாருமே அமைதியுடனும் மிகுந்த மரியாதையுடனும் எழுந்து நிற்கின்ற காட்சி எத்தகையதென்றால், அதனை என்னால் விவரித்துக் கூற முடியாது. எந்தவொரு நாட்டின் தலைவரையும் கூட இந்த நிலைமையில் ஒருபோதும் நான் பார்த்ததில்லை.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த சொற்பொழிவின் போது ஆயிரக்கணக்கான நபர்கள் இருந்தனர். அவர்களில் சிறுவர்கள், முதியவர்கள், இளைஞர்கள் ஆகிய அனைவரும் இருந்தனர். இவ்வளவு அமைதியாக அவர்கள் அமர்ந்திருப்பதைப் பார்க்கும் போது இங்கு மனிதர்கள் இருக்கவில்லை. மனித வடிவிலுள்ள பொம்மைகள் அமர்ந்துள்ளன என்று தோன்றுகிறது. இவ்வாறு கண்ணியமாக நடந்து கொள்வதும் மரியாதையுடன் நடந்து கொள்வதுமாகிய இவையெல்லாம் எனது வாழ்நாளில் எனக்கு ஏற்பட்ட தனிப்பட்ட அனுபவமாக இருக்கின்றது.

பிறகு செராலியோனிலிருந்து உள் விவகார மற்றும் Immigiration அமைச்சரான **J.B. Dawooda** சாஹிப் அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். **அவர்கள் கூறுகின்றார்கள்:**

பல்வேறு துறைகளின் அமைச்சராக நான் இருந்ததால் முழு உலகிலும் நான் பயணம் செய்துள்ளேன். பெரிய பெரிய மாநாடுகளில் நான் பங்கேற்றுள்ளேன். ஆனால் இன்று வரை இத்தகைய அன்பு, நேசம், சகோதரத்துவம், ஆன்மீகம் ஆகியவை தென்படுகின்ற இத்தகைய மகத்தான மாநாட்டை நான் ஒருபோதும் பார்த்ததில்லை.

செராலியோனிலிருந்து விருந்தினரான ஒரு பெண்மணி Honourable Justice Moosa Dameebo அவர்களும் உயர்நீதி மன்றத்தின் நீதிபதி ஆவார்கள். மாநாட்டில் கலந்து கொண்ட இவர்கள் கூறுகின்றார்கள்:

மாநாடு மிகவும் நல்ல முறையில் Organize செய்யப்பட்டிருந்தது. விருந்தோம்பல் உட்பட Transport, Security, Communication போன்ற ஒவ்வொரு துறையும் சிறந்த முறையில் தமது கடமைகளை நிறைவேற்றின. இந்த மாநாடு பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் சமுதாயங்கள் ஆகியவற்றிற்கு இடையிலுள்ள இடைவெளியை குறைப்பதற்கான மிகவும் முக்கியமான Forum ஆக திகழ்கிறது. ஒருவர் மற்றவருடன் ஒற்றுமையாக இருப்பதற்கு ஹஸ்ரத் ரஸுலே கரீம் (ஸல்) அவர்கள் இந்த கொள்கையை எடுத்துக் கூறியுள்ளார்கள். அதாவது இஸ்லாத்தில் ஒவ்வொருவரும் மற்றவரது சகோதரர்களாக இருக்கின்றார். சொற்பொழிவாளர்கள் அனைவருமே சிறந்த முறையில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். நான் Ear Phone –ஐ காதுகளிலிருந்து கழற்றவில்லை. மாநாட்டின் போது மக்கள் எவ்வித சுயநோக்கமுமின்றி ஒருவர் மற்றவர்களுக்காக அர்ப்பணமாகும் நிலையில் இருந்தனர். விருந்தோம்பல் தொடர்பாக நாம் எந்த மாற்றுக் கருத்தையும் கூற முடியாது. ஏனென்றால் அவர்கள் தொண்டு மட்டும் செய்யவில்லை. மாறாக நீங்கள் அனைவரும் மிகுந்த கண்ணியத்துடனும் மரியாதையுடனும் இங்கு நடத்தப்படுகின்றீர்கள் என்பதை மிகவும் தெளிவாகவே உணர முடிந்தது.

பிறகு கூறுகின்றார்கள்: பணியில் ஈடுபட்டுள்ள எல்லா நபர்களது முகத்திலும் புன்சிரிப்பு இருந்தது. அஹ்மதிய்யத்தின் குறிக்கோளான எல்லாரிடத்தும் அன்பு, எவரிடத்தும் பகையில்லை என்பதை உண்மையான பொருளில் அது பிரதிபலிக்கக் கூடியதாக இருந்தது.

பிறகு ஐவரிகோஸ்டின் ஒரு விருந்தாளியான **ஸுபைர் அலி சாஹிப் அவர்கள்** உச்சநீதி மன்றத்தின் நீதிபதி ஆவார்கள். Culture Ministry ல் Cabinet Director ஆக நீண்ட நாட்களாக இவர் பணியாற்றியிருந்தார். மார்க்கத்தில் இவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. மார்க்க நூல்களைப் படிப்பதில் ஆர்வம் இருந்தது. தினந்தோறும் திருக்குர்ஆனை இவர் ஓதுகின்றார். இவர்கள் இந்த நாட்களில் எங்கு தங்கியிருந்தார்ளோ அங்கு முறையாக சுபுஹ் தொழுகை மற்றும் ஏனைய நஃபில் தொழுகைகளை தொழுவதற்கான ஏற்பாட்டை இவர் செய்திருந்தார். மாநாட்டுத் திடலில் இருக்கும் போது கூட தொழுகைக்கான நேரம் வந்து விட்டதா? என்று இவர் கேட்டுத் தெரிந்து கொள்வார். ஏனென்றால் ஜமாஅத் தொழுகை இங்கு நடைபெறும் போது நான் அதிலிருந்து விலகியிருப்பதை நான் விரும்பவில்லை என்று அவர் கூறியுள்ளார். மாநாட்டில் துவக்க அமர்வில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கவிதை பாடப்பட்ட போது உணர்வு பொங்கி எழுந்ததன் விளைவாக இவரது கண்களில் கண்ணீர் வந்தது.

இதற்குப் பிறகு அவர் கூறினார்: ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சொற்கள் நேரடியாக உள்ளத்தில் இறங்குகிறது. உள்ளத்தை உருக்கக்கூடிய தக்வா பற்றிய கருத்துக்களை நான் முதன் முறையாக கேட்ட போது என்னை நானே ஒன்றுமற்றவனாகக் கருதினேன். அதன் காரணமாக எனது உணர்வுகளை என்னால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

மாநாட்டின் இறுதிநாளின் போது இவர் கூறினார்: நான் மூன்று நாட்களாக இந்த பௌதீக உலகிலிருந்தும் முற்றிலும் துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்தேன். முற்றிலும் வேறுபட்ட ஆன்மீக சூழலில் நான் இருந்தேன். அங்கு இன்ப மயமாக இருந்தது. உலகப் பணிகளிலிருந்து முற்றிலும் விடுதலை கிடைத்தது. மாநாடு முடிந்ததும் இந்த உலகிற்கு நான் திரும்ப வந்து விட்டேன். பிறகு எனது உறவினர்களுக்கும் எனக்கு நெருக்கமானவர்களுக்கும் நான் போன் செய்து பேசினேன்.

இது அந்நியர்களின் நிலையாகும். ஆன்மீக சூழலின் அழுத்தம் அவர்கள் மீது இருந்திருக்கின்றது.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: எங்களை நல்ல முறையில் கவனித்துக் கொண்டனர். நன்றி செலுத்துவதற்கான சொற்கள் எங்களிடம் இல்லை.

Congo –வுடன் தொடர்புடைய ஒரு நண்பரான இவர் நாட்டின் முன்னாள் ஜனாதிபதியின் ஆலோசகரும், C.R.S.A என்ற அவரது கட்சியின் தலைவரும் ஆவார். இனி நடைபெறவிருக்கும் தேர்தலில் நாட்டின் ஜனாதிபதிக்கான வேட்பாளராக இவர் நிறுத்தப்பட்டுள்ளார். அவர் ஒரு நாளுக்காக மட்டும் இங்கு வந்திருந்தார். மாலையில் தப்ஸீர் துறை சார்பாக வழங்கப்பட்ட Dinner –லும் இவர் கலந்து கொண்டார். சிறிது நேரம் என்னுடனும் சந்திப்பு ஏற்பட்டது.

இவர் கூறுகின்றார்: சிறிது காலம் வரை அஹ்மதிய்யா ஜமாஅத் எனக்கு அறிமுகம் ஆகாமல் இருந்து வந்தது. ஆண்டு மாநாட்டின் போது எனது கண்களே சில காட்சிகளைக் கண்டது. பிறகு எனது சொற்பொழிவுகளையும் அவர் கேட்டார். அவர் கூறினார்: இங்கு வருவதற்கு முன்னால் உங்களை எதிர்ப்பவர்களை நான் பார்த்துள்ளேன். அவர்கள்

எழுதியிருப்பதைப் படித்துள்ளேன். இன்று என்னால் தெளிவாகக் கூற முடியும். எவற்றை நான் இங்கு பார்த்தேனோ, கேட்டேனோ அதிலிருந்தும் உங்களது கலீஃபாவைப் பார்த்த பிறகு உங்களை எதிர்ப்பவர்களிடம் எந்த உண்மையும் இல்லை என்பது தெரிய வந்தது. எந்த வழிகளையும், கொள்கைகளையும் உங்கள் கலீஃபா அவர்கள் கூறுகின்றார்களோ அதற்கேற்ப இப்போது உலகத் தலைவர்கள் உங்களது பிடியில் வருவதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. ஹதீகத்துல் மஹ்தியில் ஒரு மனிதன் நுழையும் போது ஒரு காட்டுப் பகுதியில் ஒரு பெரும் நகரமே குடியமர்த்தப்பட்டுள்ள வியப்பான காட்சியை அவன் பார்க்கின்றான்.

இவர் ஹதீகத்துல் மஹ்திக்குள் நுழைந்த போது அவர் நீங்கள் முழு இங்கிலாந்தையும் வாங்கி விட்டீர்களா? என்று கேட்டார். இங்கு 3000 அல்லது 4000 பேர் பணியாற்றிக் கொண்டிருப்பார்கள். அவருக்கு இவர்கள் அனைவருமே தன்னார்வத் தொண்டர்களாகத்தான் தொண்டு புரிகின்றனர் என்று இவரிடம் கூறப்பட்ட போது, இது மிகவும் வியப்பிற்குரிய விசயமாகும். எனது சிந்தனைக்கு அப்பாற்பட்டதாகும் என்று இவர் கூறினார்.

பிறகு அவர் கூறினார்: இவ்வளவு பெரிய கூட்டத்தில் எந்தவொரு போலீஸ்காரரையும் என்னால் பார்க்க முடியவில்லை. ஆண்டு மாநாட்டின் போது பணியிலிருந்த சிலரிடமும் அவர் பேசினார். அவர்களில் சிலர் பெரிய பொறுப்புகளில் உள்ளனர். ஆனால் சிறிய சிறிய வேலைகளைக் கூட அவர்கள் செய்கின்றனர். தரையில் படுத்து உறங்குகின்றனர். இத்தகைய ஒழுங்குமுறையையும் கட்டுப்படுதலின் உயர் தரத்தையும் எனது வாழ்நாளில் ஒருபோதும் நான் கண்டதில்லை. உங்களது ஜமாஅத்தை எவரும் வெல்ல முடியாது என்று கூறுகின்றார்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் இரண்டாவது நாள் ஆற்றிய சொற்பொழிவு தொடர்பாக இவர் கூறுகின்றார்:

இந்த சொற்பொழிவில் நான் எல்லாவற்றையும் விட அதிகமாக உணர்ந்த ஒரு விசயத்தைக் கூறாமல் இருக்க என்னால் முடியாது. நான் உலகிலுள்ள பெரும் பெரும் அரசியல்வாதிகளைச் சந்தித்துள்ளேன். பெரும் பெரும் மாநாடுகளில் கலந்து கொண்டிருக்கின்றேன். அரசியல் தலைவர்களான நாம் பொதுமக்களிடம் நான் செய்தவற்றை நேர்மையுடன் எடுத்துக் கூறினால் பிறகு அரசாங்கத்தலும் பொதுமக்கள் மத்தியிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டு விடும். ஆனால் இது எளிதான காரியம் அல்ல. இரண்டு மணி நேரமாக நிற்பது, மிகவும் அமைதியான முறையில் புள்ளி விபரங்களை எடுத்துக் கூறுவதும் சம்பவங்களை எடுத்துரைப்பதும் மிகப் பெரும் பணியாகும்.

பிறகு இவர் கூறுகின்றார்: 30,000 பேர் இருந்த சபையில் உங்கள் கலீஃபா கூறியதைக் கேட்கும் போது எவராவது எல்லா வகையிலான விசயத்தையும் பேசுவதற்கான தைரியம் இருந்ததா? நான் பார்த்த இந்த விசயம் மிகவும் வியக்கத்தக்கதாகும் என்று இவர் கூறியுள்ளார். சொற்பொழிவின் போது உங்களது கலீஃபா சில நொடிகள் பேசாமல் இருக்கும் போது முழு அரங்கிலும் ஒரு மனிதர் கூட இல்லை என்பது போல் தோன்றுகிறது. பெரும் அமைதி அங்கு நிலவியது.

கூறுகின்றார்கள்: சில நேரங்களில் ஒருவேளை யாராவது பேசலாம் என்று நினைத்து நான் எனது தலையை உயர்த்திப் பார்ப்பதற்கு முயற்சி செய்தேன். நான் யாரும் பேசுவதை என்னால் பார்க்க முடியவில்லை. எல்லாரது கண்களும் மேடையின் பக்கம் மட்டுமே இருந்தது. இந்த காட்சியை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். இத்தகைய ஒழுங்குமுறையையும் கட்டுப்படுதலின் தரத்தையும் நான் எங்கும் பார்த்ததுமில்லை; கேட்டதுமில்லை.

பெல்ஜியத்திலிருந்து ஒரு நண்பர் நீண்ட காலமாக வடக்கு ஆப்பிரிக்காவிலிருந்து வருகின்றார். அவர் மாநாட்டில் கலந்து கொண்டார். M.T.A. மூலமாக ஜமாஅத் பற்றிய அறிமுகம் இவருக்கு கிடைத்தது. நிகழ்ச்சிகளில் இவர் கலந்து கொண்டார். ஐரோப்பிய விருந்தினர்களுக்காக தனியாக ஒரு கூடாரத்தில் உணவிற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறிருந்தும் அவர் பொதுவான கூடாரத்தில் உணவு உண்பதற்காக சென்று விடுவார். சொற்பொழிவுகளைக் கேட்டு இவர் சிறந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளார். உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பைஅத் செய்து இவர் ஜமாஅத்தில் இணைந்துள்ளார்.

பெல்ஜியத்திலிருந்து இன்னொரு நண்பரான Saani Noaf மாநாட்டில் கலந்து கொண்டார். இவர் பெல்ஜியத்திலுள்ள Niger Community –யின் உறுப்பினர் ஆவார். Community –க்கென்று ஒரு Centre இருக்கின்றது. இவர் தமது பிரதிநிதியை இங்கு அனுப்பி வைத்தார். இந்த Community ஐச் சார்ந்துள்ள மக்கள் அஹ்மதிய்யத்தின் பக்கம் வந்து கொண்டிருக்கின்றனர். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்கின்றனர். ஜெர்மனி ஆண்டு மாநாட்டு நடைபெற்ற சமயத்தில் இந்த Community ஐச் சேர்ந்த 22 பேர் பைஅத் செய்திருந்தனர். பெல்ஜியத்திலுள்ள இவர்களது சென்டரிலுள்ள மக்களது எண்ணிக்கை குறைந்து கொண்டே செல்கிறது. அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யத்தில் மக்கள்

இணைந்து கொண்டே செல்கின்றனர். எனவே Community –ன் நிர்வாகம் தங்களது பிரதிநிதியாக இவரை இங்கு அனுப்பி வைத்து இது எத்தகைய ஜமாஅத்தாக இருக்கின்றது? நமது மக்கள் நம்மை விட்டு விட்டு அவர்களுடன் இணைவதற்கான காரணம் என்ன? என்பதை அறிய விரும்பியது. எனவே ஜமாஅத்தின் தவறுகளையும், குறைகளையும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். பிறகு திரும்பிச் சென்று தமது மக்களிடம் எந்த ஜமாஅத்தில் நீங்கள் சேர்ந்துள்ளீர்களோ அவர்களிடம் இன்னின்ன தவறான கொள்கைகள் உள்ளன. இன்னின்ன குறைகள் உள்ளன என்று கூற வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்த இவர்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளை முழுவதுமாக கேட்டார். தினந்தோறும் மாலை நேரத்தில் பல்வேறு தலைப்புகளில் உரையாடல் நடந்தது. சிறிது நேரம் அவர் என்னிடமும் பேசினார்.

அவர் கூறினார்: முழு மாநாட்டின் போதும் எனக்கு இஸ்லாத்திற்குப் புறம்பான எந்தவொரு விசயமும் தென்படவில்லை.

பிறகு இவர்கள் கூறுகின்றார்கள்: உங்களது சொற்பொழிவுகள் மிகவும் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தின. மாநாட்டில் கலந்து கொண்டு நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றேன். உங்களது மாநாடு வழக்கத்திற்கு மாற்றமான ஒரு நிகழ்வாக இருக்கின்றது. நான், பணியாற்றுகின்ற தொண்டு செய்கின்ற எல்லா பணியாளர்களது மனத்தூய்மை மற்றும் அன்பால், மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன்.

கஸகஸ்தான் ஜமாஅத்தின் தலைவரான இஸாத் அமான் சாஹிப் அவர்களுக்கு இவ்வருடம் மாநாட்டில் கலந்து கொள்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. மாநாடு தொடர்பாக இவர்கள் கூறுகின்றார்கள்:

மாநாடு தொடர்பாக நான் கூறுவது என்னவென்றால், நான் அங்கு கண்டதை வேறு சொற்களால் கூற முடியாது. ஆண்டு மாநாட்டை சொற்களால் படம்பிடிக்க முடியும் என்றால் இந்த சொற்கள் மட்டுமே எனது மூளையில் வருகின்றது. அது, இது ஓர் உண்மையான அற்புதமாகும் என்ற சொற்களாகும். வேறு சொற்கள் எனது மூளையில் வரவில்லை. மாநாட்டில் கலந்து கொண்டுள்ள சகோதரர்களது உள்ளங்கள் காலத்தின் கலீஃபா மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆகியோர் மீது கொண்டுள்ள பேரன்பில் நிறைந்துள்ளது. இந்த அன்பு தான் அவர்களை இரவு பகலாக ஜமாஅத்திற்கு தொண்டு செய்ய வைத்துள்ளது. ஆண்டு மாநாட்டின் இந்த சில நாட்களில் எனக்கு மாநாட்டின் ஏற்பாடுகளில் எந்தவொரு குறையும் தெரியவில்லை. எல்லா ஏற்பாடுகளின் தரமும் மிகவும் உயர்வாக இருந்தது.

பிறகு கூறுகின்றார்கள்: ஆயிரக்கணக்கான மக்கள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டு அதில் கூறப்படுகின்ற விசயங்களைக் கேட்டு தங்களிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டவர்களாக இருப்பார்கள் என்று நான் உறுதி கொள்கின்றேன். அல்லாஹ் அவ்வாறே செய்வானாக!

Thatharistan ஐச் சேர்ந்த ஓர் அஹ்மதி பெண்ணுக்கு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் கூறுகின்றார்கள்:

ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டதன் மூலமாக எனது உள்ளம் நன்றி உணர்வுகளால் நிறைந்துள்ளது. ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைப்பதற்கு நான் எல்லாரையும் விட முதலாவதாக அல்லாஹ்வுக்கு நன்றி கூறுகின்றேன். பிறகு காலத்தின் கலீஃபாவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பிறகு ஆண்டு மாநாட்டு ஏற்பாடுகளைச் செய்வதற்காக இரவு பகலாக சோர்வின்றி உழைப்பதற்கான நல்வாய்ப்பு கிடைத்துள்ள எல்லா மக்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். உலகின் பல பகுதிகளிலிருந்தும் வந்துள்ள மக்கள் பரஸ்பரம் அன்பு மற்றும் விருந்தோம்பலின் உணர்வுடன் நிரம்பியவர்களாகவும் புன்சிரிப்பு தவழும் முகத்துடனும் ஒருவர் மற்றவரை சந்திக்கின்றனர். எனக்கு ஆண்டு மாநாட்டில் முதன் முறையாக கலந்து கொள்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் இதுவரை இதற்கு முன்னர் M.T.A. நிகழ்ச்சிகள் மூலம் நான் பயனடைந்துள்ளேன். ஆண்டு மாநாட்டின் சூழலில் நான் வந்த பிறகு மிகவும் அதிகமாக இதை நான் உணர ஆரம்பித்தேன். அதாவது நான் ஓர் ஆன்மீக உலகிற்கு வந்து விட்டேன். அது அமைதியும், நன்மையும் இருக்கின்ற உலகமாகும்.

கூறுகின்றார்கள்: மிகவும் ஆழமாக சிந்தித்து நான் இவற்றை உணர்ந்து கொண்டிருந்தேன். ஒற்றுமையாக இருக்கின்ற பெரிய குடும்பத்தைச் சார்ந்தவனாக நான் இருக்கின்றேன். இங்கு ஏகனாகவும் தனித்தவனாகவும் இருக்கும் இறைவன், ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்), ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பரான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் ஆகியோர் மீதுள்ள அன்பு உள்ளங்களில் ஆட்சி செய்கின்றது. ஜமாஅத் சகோதரர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்காக அன்பு, நேசம், கண்ணியமாக நடப்பது ஆகிய உணர்வுகளை உடையவர்களாக இருக்கின்றார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் தொடர்புள்ள நான் நற்பாக்கியம் பெற்றவனாக இருக்கின்றேன். ஆண்டு மாநாடு என்னிடம் எத்தகைய ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றால் அடுத்த

வருடம் நான் எனது எல்லா பிள்ளைகளையும் எனது தாயாரையும் ஆண்டு மாநாட்டிற்கு அழைத்து வருவேன். இன்சா அல்லாஹ்.

Turkmenistan –லிருந்து ஒரு நண்பர் மாநாட்டில் கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார்:

ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வது எங்களது நற்பாக்கியமாகும். அல்லாஹ்வின் அருளாகும். நாங்கள் இந்த மாநாட்டிலிருந்து எந்த அளவு பலன் பெற்றுள்ளோம் என்றால் நாங்கள் எங்கள் உணர்வுகளை கடிதத்தில் சொற்கள் மூலம் தெரிவிப்பது சாத்தியமற்றதாகும். சுருக்கமாக கூறுவதாயிருந்தால் இந்த மாநாடு இஸ்லாம் பற்றிய எங்கள் அறிவைப் புதுப்பித்து விட்டது. அது எங்களை அல்லாஹ்வையும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களையும் நினைவு கூர்வதில் முன்னேறும்படி செய்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது சகோதர சகோதரிகளுடன் அன்பு கொள்ள வேண்டும் என்று கூறியுள்ள போதனைகளுக்கேற்ப நம்மை அதில் அவன் முன்னேறச் செய்துள்ளான். அஹ்மதி முஸ்லிம் என்ற நிலையில் எங்களது ஈமானின் அடித்தளங்களை முன்பை விட வலிமையானதாக ஆக்கியுள்ளான். இவ்வாறு நமது சகிப்புத்தன்மையின் இயல்பையும் அவன் அதிகப்படுத்தியுள்ளான்.

புதிதாக அஹ்மதிகளாக இருப்பவர்கள் இவ்வாறு தமது ஈமானிலும் கலப்பற்ற மனத்தூய்மையிலும் முன்னேறி வருகின்றனர்.

சிலியிலிருந்து ஓர் அஹ்மதி நண்பரான Khiafal Turt சாஹிப் மாநாட்டில் முதன்முறையாக கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார்: U.K. ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டது எனக்கு ஆன்மீக இன்பம், மகிழ்ச்சி ஆகியவற்றை வழங்க காரணமாக இருக்கின்றது. எனது தந்தையார் மிஸ்ரி முஸ்லிமாக இருந்தார். தாயார் சிலியைச் சேர்ந்தவர். எனது தந்தையார் எனக்கு கற்றுத்தந்த இஸ்லாத்தை நான் மறந்து விட்டேன். நான் முற்றிலும் அவநம்பிக்கை அடைந்து விட்டேன். பல தலைமுறைகளாக இந்த குடும்பம் சிலியில் குடியமர்ந்துள்ளனர்.

கூறுகின்றார்கள்: சிலியில் அஹ்மதி முபல்லிக் பிரசுரங்களை விநியோகம் செய்து கொண்டிருந்தார். முபல்லிக்குடன் எனக்கு சந்திப்பு ஏற்பட்டது. முபல்லிக் எனக்கு அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தை அறிமுகம் செய்து வைத்தார். பிறகு நான் பைஅத் செய்து விட்டேன். இப்போது U.K. ஆண்டு மாநாட்டில் நான் கலந்து கொண்டது எனது ஈமான் மேலும் அதிகமாவதற்குக் காரணமாக இருக்கின்றது. நான் என்னை உண்மையான முஸ்லிம் என்று உறுதி கொள்கின்றேன். எனது நாட்டில் அஹ்மதிய்யத்தை தப்லீக் செய்வேன் என்ற உணர்வுடன் நான் திரும்பிச் செல்கின்றேன்.

பனாமாவிலிருந்து புதிய அஹ்மதியான Danthe Misthu சாஹிப் அவர்கள் வந்திருந்தார்கள். மாநாட்டில் பனாமாவிலிருந்தும் முதன் முறையாக பிரதிநிதி கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார்:

மாநாட்டில் நான் பலவற்றையும் கற்றுக் கொண்டேன். மாநாட்டில் கலந்து கொண்டதன் மூலம் எனது ஈமான் அதிகமாகியுள்ளது. எந்த சகோதரத்துவத்தை நான் இங்கு பார்த்துள்ளேனோ அதை இஸ்லாத்தில் எங்குமே என்னால் காண முடியவில்லை. இங்கு வந்து நான் மிகவும் நிம்மதியடைந்துள்ளேன். உள்ளத்திற்கும் திருப்தி ஏற்பட்டது. அல்லாஹ் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியத்தை எனக்கு வழங்கியதற்காக நான் பெருமை கொள்கின்றேன். மாநாட்டின் போது எனக்கு பல்வேறு நாடுகளுடன் தொடர்புடைய சகோதரர்களை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்கள் பல்வேறு சமுதாயங்களைச் சார்ந்தவர்களாக இருந்தனர். இவர்களிடமிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்களைக் கேட்டு எனது ஈமான் அதிகரித்தது. எனது நாடான பனாமாவில் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் பணியைச் செய்து அவர்களை அஹ்மதியாக்குவதற்கு முயற்சி செய்வேன்.

கூறுகின்றார்கள்: ஒரு பெரும் எண்ணிக்கையில் மக்கள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டனர். எண்ணற்ற மக்கள் இருந்தனர். ஆனால் எல்லாருக்கும் ஒரே உள்ளம் துடித்தது. அவர்கள் 30,000 பேர்களாக இருந்தாலும் உள்ளம் ஒன்றாகத்தான் இருந்தது.

Gautemala –விலிருந்து அங்குள்ள தேசிய பாராளுமன்ற உறுப்பினரான Surki Oalax சாஹிப் அவர்கள் கலந்து கொண்டார்கள். கிறிஸ்தவரான இவர் கூறுகின்றார்:

நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உயர்வான நல்லொழுக்கத்தையும், அன்பையும், சகோதரத்துவத்தையும், ஒருமைப்பாட்டையும், அவர்களது வலுவான ஈமானின் உணர்வு ஆகியவற்றையும் பார்த்து மிகவும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். அப்படிப்பட்ட அன்பையும், நேசத்தையும் நான் எங்குமே பார்க்கவில்லை. ஜமாஅத்தின் அமைப்பு பாராட்டத் தகுதியுடையதாகும். மிகவும் மகத்துவம் வாய்ந்த ஈடிணையற்ற தனித்தன்மையுடைய மாநாடாக அது இருந்தது. ஒவ்வொரு ஏற்பாட்டையும் பார்த்து மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். இஸ்லாத்தின் எத்தகைய அழகான

உருவத்தை அஹ்மதிய்யா ஜமாஅத் எடுத்துக் கூறுகின்றதோ அது மற்றவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்த சகோதரர்களாக அவர்கள் இருந்தாலும் எல்லாரது உள்ளமும் ஒன்றாக இருக்கின்றது. அது துடித்துக் கொண்டிருக்கின்றது. மாநாட்டில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்ததன் மூலம் நான் என்னை நற்பாக்கியம் பெற்றவனாகக் கருதுகின்றேன்.

ஜப்பானிலிருந்து ஒரு பெண் Minosaki Hiro சாஹிபா அவர்கள் வந்திருந்தார்கள். இவர் Ph.d படித்துள்ளார். ஜப்பானிலுள்ள பல்கலைக் கழகத்தின் Professor ஆவார். அவர் கூறுகின்றார்:

சுனாமியின் காரணமாக ஜப்பானில் பேரழிவு ஏற்பட்ட சமயத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் மத, இன பாகுபாடின்றி மனித இனத்திற்கு அளவற்ற தொண்டுகளைச் செய்துள்ளது. ஜமாஅத்தின் கொள்கைக்கும் செயலுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. எதை அவர்கள் கூறுகின்றார்களோ அதை அவர்கள் செய்கின்றனர்.

Guayana –விலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் மன்சூர் நாஸிர் சாஹிப். இவர் முஸ்லிம் ஆவார். இவர் மாநாட்டில் கலந்து கொண்டார். இவர் மிகவும் பழைய பாராளுமன்ற உறுப்பினர் ஆவார். Labour Minister ஆகவும் Industry and Commerce Minister ஆகவும் இவர் இருந்துள்ளார். Guayana –வின் Political Affairs ன் ஆலோசகரான இவர்கள் கூறுகின்றார்கள்:

ஆண்டு மாநாட்டிற்கான ஏற்பாடுகளைப் பார்த்து நான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். மூன்று நாட்களும் இவர் இங்கு மாநாட்டில் கலந்து கொண்டார். ஜமாஅத்தின் முன்னேற்றம் தொடர்பாக இரண்டாவது நாள் வாசிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக இவர் கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இவ்வருடம் கிடைத்துள்ள முன்னேற்றம் மற்றும் இறைவனது உதவியும் ஆதரவும் இருந்து வருவது தொடர்பான சம்பவங்களைக் கேட்டு நான் மிகுதியான தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன்.

பெல்ஜியத்திலிருந்து அஹ்மதியல்லாத விருந்தினரான ஒரு பெண் Miss. Salini Mariya மாநாட்டிற்கு வந்திருந்தார்கள். இவர் I.T. Consultant ஆவார். இவர் கூறுகின்றார்:

உள்ளூர் ஜமாஅத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் மூலமாக எனக்கு ஜமாஅத் பற்றிய அறிமுகம் கிடைத்தது. மற்ற தகவல்களை ஜமாஅத்தின் இணையதளம் மூலமாக நான் பெற்றேன். அவர்களது ஆர்வத்தைக் கருத்தில் கொண்டவாறு பெல்ஜியம் ஜமாஅத் அவரை U.K. ஆண்டு மாநாட்டில் வந்து கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தது. அவர் வந்தார். அவர் கூறுகின்றார்: ஆண்டு மாநாட்டின் அனைத்து நிகழ்ச்சிகளையும் நான் பார்த்தேன். அதில் நான் பங்கேற்றேன்.

இவ்வாறு இவர் ஐரோப்பாவிலுள்ள அஹ்மதி பெண்களுடன் ஒன்றிவிட்டார். ஜாமிஆ அஹ்மதிய்யாவில் இவர் தங்கி வந்தார். அங்கு தஹஜ்ஜுத் தொழுகை நடந்து கொண்டிருந்தது. இவர் அங்கு தனிமையில் கவலையுடன் அமர்ந்திருந்தார். இவருக்கு தொழத் தெரியாது. இவரிடம் ஒரு பெண் நீங்கள் தொழ விரும்புகின்றீர்களா? என்று கேட்டதற்கு ஆம் நான் தொழ விரும்புகின்றேன் என்று அவர் பதில் கூறினார். பிறகு புதிதாக பைஅத் செய்த ஒரு பெண் அவருக்கு உளூ செய்யக் கற்றுக் கொடுத்தார். தொழும் வழிமுறையையும் கற்றுத் தந்தார். பிறகு அவர் தொழுகையில் கலந்து கொண்டார். முதல் நாள் அவர் ஜீன்ஸும் சர்ட்டும் அணிந்திருந்தார். மாநாட்டுத் திடலில் பெண்களின் உடையைப் பார்த்து இவரிடம் சிறந்த தாக்கம் ஏற்பட்டது. பெல்ஜியத்தின் முபல்லிக் சாஹிபின் மனைவியிடம் இவர் இத்தகைய ஆடையை நான் அணிய விரும்புகின்றேன் என்று கூறினார். பிறகு ஆண்டு மாநாட்டுத் திடலிலுள்ள பஸாரில் அவர்கள் வாங்கி வந்த ஆடையை அவர் அணிந்தார். என்னுடைய சொற்பொழிவுகளைக் கேட்ட பிறகு உண்மையான இஸ்லாம் தொடர்பாகவும் இறையச்சமுள்ளவரின் பண்புகள் தொடர்பாகவும் நான் நிகழ்த்திய சொற்பொழிவுகள் தொடர்பாக கூறும்போது அது என்னிடம் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது என்று அவர் கூறினார். இந்த விசயங்களைக் கேட்ட பிறகு நான் முஸ்லிமாக வேண்டும் என்று முடிவெடுத்து விட்டேன் என்று கூறினார். பிறகு இவர் உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அப்போது பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார். இவர் என்னை சந்திக்க வந்தார். அல்லாஹ்வின் அருளால் தன்னை முழுமையாக மறைத்துக் கொள்கின்ற ஆடையை இவர் அணிந்தருந்தார்.

எனவே இந்த மாநாடு நம்மவர்கள் மீதும் அந்நியர்கள் மீதும் தனது ஆன்மீக சூழல் மூலமாக தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஒரு நல்லியல்பு கொண்ட மனிதருக்கு இஸ்லாத்தின் சிறப்புகளை ஏற்றுக் கொண்டவாறு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் நம்மை எதிர்க்கின்ற முஸ்லிம்களுக்கு அந்நியர்களுக்கு கூறப்பட்டதை விட முதல் கட்டளை அவர்களுக்குத்தான் கூறப்பட்டிருக்கின்றது. பனிமலைகளில் தவழ்ந்து செல்ல வேண்டியது வந்தாலும் சென்று இமாம் மஹ்திக்கு ஸலாத்தைக் கூறும்படி அவர்களுக்கு கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் அவர்களுக்கு இதைப் பற்றி புரியவில்லை. அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக!

பிறகு இதைப் பாருங்கள்! பெரும்பாலான விருந்தினர்கள் குறிப்பாக அந்நியர்களான விருந்தினர்கள் சிறுவர்களையும், பெண்களையும், முதியவர்களையும், இளைஞர்களையும் அவர்கள் விருந்தோம்பல் செய்வதைக் கண்டு அதன் ஆழமான தாக்கம் அவர்களிடம் ஏற்பட்டிருக்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நபர்களிடம் இருக்கின்ற இந்த தொண்டு செய்கின்ற உணர்வும் கூட அமைதியாக செய்யப்படும் தப்லீகாக இருக்கின்றது. ஒரு சிறுவன் குடிப்பதற்கு தண்ணீரைத் தந்து விட்டு அந்த இடத்தை விட்டு விட்டு கடந்து சென்று விடுகின்றார். ஆனால் எத்தகைய தாக்கத்தை அந்த சிறுவன் ஒரு உள்ளத்தில் நிலைபெறச் செய்து விட்டான் என்றால் அவன் அந்த உள்ளத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது பாதங்களின் கீழ் கொண்டு வந்து சேர்த்து விட்டான். இவ்வாறே ஏதாவதொரு இளைஞர் எவருக்காவது உணவு கொடுத்துக் கொண்டிருப்பார். வேறு ஒருவர் கார் நிறுத்துமிடத்தில் தனது நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்டுபவராக இருக்கின்றார். இளைஞர்களும், இளம் பெண்களும் ஸ்கேனிங் மூலம் செக்கிங் செய்யும் போது மிகவும் சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துகின்றனர். ஒவ்வொரு துறையிலும் லஜ்னா தனது ஏற்பாடுகளை மிகவும் சிறந்த முறையில் செய்திருக்கின்றார்கள். வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் மிகுந்த ஈடுபாட்டுடன் இவர்கள் செயல்பட்டனர். இந்த விசயங்கள் எங்கு இந்த எல்லா பணியாளர்களுக்கும் நம்மவர்களின் துஆக்களை பெற்றுத் தரக்கூடியதாக ஆக்குகின்றதோ அங்கு அது அந்நியர்களுக்கு இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் உண்மையை தெரிவிக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்த அழகிய போதனைகளின் பக்கம் அவர்களை ஈர்க்கக்கூடியதாக அது இருக்கின்றது.

எனவே பணியில் இருந்த இந்த எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும் நானும் நன்றி கூறுகின்றேன். கடந்த வருடத்தை விட இந்த வருடம் குறிப்பாக மிகவும் சிறந்த முறையிலும் தங்களது நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்டியவாறும் இவர்கள் தமது கடமைகளை நிறைவேற்றியுள்ளனர். மக்களிடமிருந்து எனக்கு வரும் கருத்துக்களில் இந்த வருடம் Parking –ன் துறை தொடர்பாக மிக நல்ல கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. நாங்கள் Parking செய்யும் போது மிகவும் சிறந்த ஒழுக்கத்தை வெளிப்படுத்தியவாறு அவர்கள் எங்களது நிலைமை பற்றி கேட்டனர். ஏதாவது துன்பம் நேர்ந்தால் அதற்காக மன்னிப்புக் கேட்டனர். வெப்பத்தின் காரணமாக தண்ணீர் வேண்டுமா? என்று கேட்டனர்.

எழுதுகின்றவர் எழுதுகின்றார்: இவர்களில் எவரையும் எனக்கு தெரியாது. ஆனால் இவர்களின் உயர்ந்த ஒழுக்கத்தைப் பார்த்து பயணத்தில் ஏற்பட்ட சோர்வில் பாதி விலகி விட்டது. ஆக இதுதான் ஒரு அஹ்மதியின் தனிப்பட்ட சிறப்பம்சமாகும். இப்படிப்பட்ட உயர்வான நல்லொழுக்கத்தை நம்மில் ஒவ்வொருவரும் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். அல்லாஹ் இந்த உயர்வான நல்லொழுக்கங்களை எப்போதும் நிலைநாட்டுவதற்கான நல்வாய்ப்பையும் வழங்குவானாக!

இவ்வாறே தப்ஸீர் துறையின் விருந்தோம்பலின் தரமும் இம்முறை மிகவும் சிறப்பாக இருந்தது. ஜாமிஆவின் மாணவர்களும், வக்ஃபே நவ் திட்டத்தின் கீழுள்ள ஆண்களும் பெண்களும் மிகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளனர். ஒவ்வொரு விருந்தாளியும் இவர்களை புகழ்கின்றனர். ஆனால் பணியில் இருப்பவர்களுக்கு எங்காவது குறை இருந்தால் அதை அடுத்த வருடம் எவ்வாறு சிறந்த முறையில் நிவர்த்தி செய்ய முடியும் என்பதை அவர்களே ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

பிறகு இந்த முறை கபாபீரிலிருந்து அரபு நாட்டு விருந்தாளிகளின் மிகப்பெரும் குழு ஒன்று வந்திருந்தது. அவர்கள் 110 பேர் இருந்தனர். அவர்களுக்கான பொதுவான ஏற்பாடும்கூட கடந்த வருடத்தை விட இந்த வருடம் சிறப்பாக இருந்தது. U.K. வின் Arab Desk –ம் இவர்களின் துணை தப்லீக் செயலரும் இந்த வருடம் இதன் Incharge ஆகவும் பணியாற்றினார்கள். இவரும் இவரது குழுவும் இம்முறை சிறப்பாக செயல்பட்டனர். மாசா அல்லாஹ். அல்லாஹ் அவர்களுக்கும் இதற்கான நற்கூலியை வழங்குவானாக!

கடந்த வருடமும் இவர்கள் இந்தப் பணியைச் செய்தனர். ஆனால் இந்த வருடம் எந்த அளவு சிறப்பான ஏற்பாடுகள் இருந்ததோ அதைப்போன்று கடந்த வருடம் இருக்கவில்லை. பிறகு பொதுவாக விருந்தாளிகளிடம் மிகவும் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்திய விசயம் புகைப்படக் கண்காட்சியாகும். என்னைச் சந்தித்த பல விருந்தினர்களும் இதைப் பற்றி கூறியிருந்தார்கள். பொதுவாக அஹ்மதிகளிடமும் இதற்கு சிறந்த Feedback இருந்து வருகிறது. இதன் மூலம் அஹ்மதிகளுக்கு அவர்களது வரலாறு தெரிந்ததுடன் மட்டுமல்லாமல் அந்நியர்களிடமும் நமது வரலாறு மிகச் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

லங்கர் கானாவின் ஏற்பாட்டிலும் கடந்த வருடத்தை விட சிறந்த நிலை ஏற்பட்டுள்ளது. ரொட்டியையும் பொதுவாக அனைவரும் விரும்பி சாப்பிட்டுள்ளனர். இவ்வாறு குழம்பும் நன்றாக இருந்தது. ஆனால் ஒரு நபர் உணவு தொடர்பாக கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார். அதில் வாடை வந்து விட்டது. பூசனம் பிடித்திருந்தது என்று

கூறியுள்ளார். ஆனால் எவ்வாறிருப்பினும் நான் எவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேனோ அந்த தகவலின்படியும் அல்லது மக்கள் தாமாகவே எனக்கு எழுதி தெரிவித்த தகவலிலும் பூசனம் பிடித்த உணவு இருந்ததாக எந்தத் தகவலும் இல்லை. நானே நேரில் சென்றும் சில இடங்களில் பார்த்தேன். ஆனால் ஒருவேளை இவருக்கு யாராவது பூசனம் பிடித்த உணவைக் கொடுத்திருக்கலாம். ஆனால் இதை எழுதியுள்ள நபர் பற்றி எனக்கு தெரியும். இவருக்கு தான் செய்வதைத் தவிர வேறு எவரது பணியும் நன்றாக இருப்பதேயில்லை. மற்ற ஒவ்வொருவரது பணியும் குறைந்த தரத்தை உடையதாக இருந்தது என்று இவர் நினைக்கின்றார். ஜெர்மனியில் நான் Kitchen –ல் டியூட்டி கொடுத்துக் கொண்டிருந்த போது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் இவரைப் பார்த்து நீங்கள் Kitchen –ல் இருக்கும் போது எனக்கு எந்தக் கவலையும் இல்லை என்று கூறியதாக இவர் எழுதியுள்ளார். அவர்கள் அவ்வாறு கூறினார்களா? இல்லையா? என்பது பற்றி நமக்கு தெரியவில்லை. ஆனால் அவ்வாறு அவர்கள் கூறியிருந்தாலும் கூட அதன் மூலம் இவர் தன்னைப் பெரிதாக வெளிப்படுத்திக் காட்டுவது அவர்களுக்கு தெரிந்திருந்தால் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் நான் கூறிய விசயங்களை நான் வாபஸ் வாங்கிக் கொள்கின்றேன் என்று கூறியிருப்பார்கள். இந்த சுய விருப்பமும், சுயமாக தன்னைப் பெரிதாகக் காட்டிக் கொள்வதும், தன்னைப் பற்றி புகழ்ந்து கூறுவதும், மற்றவர்கள் மீது ஆட்சேபனை செய்வது ஆகிய பழக்கங்களிலிருந்து விடுபட்டு நம்மை சீர்திருத்திக் கொள்வதற்கு நம்மில் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பணிகள் குறிப்பிட்ட ஒரு நபருடன் மட்டும் தொடர்புடையது அல்ல. ஒரு நபரை சார்ந்திருந்து இந்தப் பணிகளை நாம் செய்வதில்லை. இதுதான் ஜமாஅத்தின் சிறப்பம்சமாகும். இதைத்தான் அந்நியர்களும் புகழ்ந்து கூறியுள்ளார்கள். Team work நடைபெறுகிறது. எல்லா சிறியவர்களும் பெரியவர்களும் இணைந்து இந்தப் பணிகளைச் செய்கின்றனர். மிகவும் உயர்வான தரத்தை உடைய பணிகளாக அவை இருக்கும். இப்போது அல்லாஹ்வின் அருளால் இங்கு U.K. –விலும் நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் தூய உள்ளம் கொண்ட பணியாளர்களை அல்லாஹ் தந்துள்ளான். ஒருவரை அவரது பணியிலிருந்து அகற்றி விட்டால் அந்த இடத்திற்கு பணி செய்யக்கூடிய புதிய நபர்கள் 10 பேர் வந்து விடுகின்றனர். அவர்கள் தங்களை பெரிதாக வெளிப்படுத்திக் காட்டுவதற்குப் பதிலாக பணிவுடன் நடந்து கொள்பவர்களாக இருக்கின்றனர். மேலும் அல்லாஹ்வின் மீதுள்ள அச்சமும் அவர்களுக்கு இருக்கின்றது.

எவ்வாறிருப்பினும், எனக்கு இப்படிப்பட்டவர்களே தேவைப்படுகின்றனர். அவர்கள் பணிவுடன் தமது பணிகளைச் செய்பவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு பணியாற்றுகின்றவர்களுக்காக நான் துஆவும் செய்கின்றேன். டியூட்டி கொடுக்கின்ற சிலர் தொடர்பாக எனக்கு புகார்கள் வந்துள்ளன. இங்கிருந்து அங்கிருந்து வந்த புகார்கள் அல்ல. குத்தாமுல் அஹ்மதிய்யா தாமே இதனை உணர்ந்துள்ளனர். அதாவது பாதுகாப்புப் பணியில் இருந்த சிலர் சிலரிடம் மிகவும் கடுமையாக நடந்து கொண்டார்கள். உதாரணமாக, ஒரு சிறுவனை எவ்வித காரணமுமின்றி பின்னால் செல்லும்படி கூறி அவனை தள்ளி விட்டிருக்கின்றார்கள். அதன் காரணமாக அவனுக்கு காயம் ஏற்பட்டிருக்கின்றது. அல்லது அதனால் அவனுக்கு கஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. அவனது வயிற்றில் கையை வைத்து தள்ளியுள்ளனர். டியூட்டி கொடுக்கக் கூடியவர்கள் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்வதும் அவசியமானதாகும். குறிப்பாக எல்லாவற்றையும் கண்காணிப்பதும் அவசியமானதாகும். மேலும் தங்கள் உடல் உறுப்புகளை தங்களது கட்டுப்பாட்டிற்குள் வைப்பதும் அவர்களுக்கு அவசியமானதாகும். இது இல்லாமல் பாதுகாப்பிற்காக டியூட்டியை கொடுக்க முடியாது.

எனவே குத்தாமுல் அஹ்மதிய்யா வருகின்ற வருடத்திற்காக இந்த முழு வருடமும் Survey எடுக்க வேண்டும். அதில் முழு நாட்டிலும் வலுவான உடல் உறுப்புகளைக் கொண்ட இளைஞர்கள் யார் என்பதையும் அவர்கள் தங்களது உணர்வுகளை தங்களது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவர்களாக உள்ளனரா என்பதையும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அவசரமான தருணங்களில் இவர்கள் உதவக்கூடியவர்களாக இருக்க வேண்டும். வரும் வருடத்தில் இப்படிப்பட்டவர்களை இதற்காக தேர்வு செய்ய வேண்டும்.

இன்னொரு ஆட்சேபனையும் என்னிடம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அது ஓரளவு சரியான கூற்றாகும். ஆண்களின் அரங்கு மற்றும் பெண்களின் அரங்கிற்கு நடுவில் M.T.A. –வின் அரங்கு இருந்தது. அங்கு அலுவலகமும் Transmission ஆகியவற்றிற்கான ஏற்பாடும் இருந்தது. இதன் காரணமாக எவராவது அவசரமாக அரங்கிலிருந்து வெளியேற வேண்டியது இருந்தால் அதில் தடை ஏற்படுகிறது. எனவே மாநாட்டுத் திடலின் இருபுறமும் திறந்த வெளியில் வழிப்பாதை இருக்க வேண்டும். இந்த ஆட்சேபனையைத் தவிர இன்னொரு விசயமும் இருக்கின்றது. இதனால் இன்னொரு பலனும் கிடைக்கும். வெப்பத்தின் காரணமாக திரைகளை அகற்ற வேண்டியது வந்தால் காற்றும் நன்றாக வரும். எனவே M.T.A. –வின் அரங்கை வேறிடத்தில் அமைத்துக் கொள்ளலாம். அரங்கிற்கு முன்புறமோ பின்புறமோ அமைத்துக் கொள்ளலாம்.

ஒரு பெண் ஜெர்மனியிலிருந்து வந்திருந்தார். மாநாட்டின் அமைப்பாளருக்கு இந்த விசயத்தையும் கூறி விடுகின்றேன். ஏற்பாடுகள் அனைத்துமே நன்றாக இருந்தது. தூய்மையைப் பேணுவதில் சிறந்த நிலை இருந்தது. டாய்லெட் சுத்தமாக இருந்தது. ஆனால் டாய்லெட்டுகளில் Mug வைக்கப்பட வேண்டிய இடங்களில் Jug ஐ வைத்திருந்தனர். அதை குறிப்பிட்டுக் கூறி அந்தப் பெண் ஜெர்மனியிலிருந்து Mug வைப்பதற்கான ஏற்பாட்டை என்னால் செய்ய முடியும் அல்லது வேறு இடங்களிலிருந்து Mug கொண்டு வர முடியும் என்று அவர் என்னிடம் கூறினார். மகிழ்ச்சியுடன் இந்த ஏற்பாட்டை அவர் செய்ய வேண்டும். U.K. –வில் இருப்பவர்கள் அவரது இந்த Offer ஐ ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருதுகின்றேன். இவ்வாறே Paper Towel மற்றும் பெரிய Dust Bin –க்கான ஏற்பாடும் அதிகமாக இருக்க வேண்டும். மாநாடு முடிந்ததும் குளியலறைகளில் தண்ணீர் முடிந்து விட்டது என்ற ஒரு புகாரும் வந்துள்ளது. மாநாட்டு அமைப்பாளர்கள் இனி வருங்காலத்தில் இதை கவனத்தில் வைத்திருக்க வேண்டும்.

எவ்வாறிருப்பினும் இப்படிப்பட்ட சில விசயங்கள் உள்ளன. இதை தவிர பொதுவாக மாநாட்டின் ஏற்பாடுகளும் விருந்தினர்கள் குறிப்பிட்டிருந்தது போன்று சொற்பொழிவுகளின் தரமும் நன்றாக இருந்தது. பொதுவான சுற்றுச்சூழலும் கூட அல்லாஹ்வின் அருளால் மிகவும் சிறப்பாக இருந்தது. மாநாட்டில் கலந்து கொண்ட ஒவ்வொருவரும், ஒவ்வொரு வருடமும் மாநாட்டில் கலந்து கொள்பவர்களும் கூட முன்பை விட சிறந்த தரத்தில் அனைத்து ஏற்பாடுகளும் இருந்தன என்பதையும் தெரிவித்துள்ளனர். எவ்வாறிருப்பினும் எல்லா பணியாளர்களும் மாநாட்டின் அமைப்பாளர்களும் நன்றி தெரிவிப்பதற்குரிய தகுதியுடையவர்களாக இருக்கின்றனர். அல்லாஹ் இதற்கான நற்கூலியை அவர்களுக்கு வழங்குவானாக!

பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். நாளை செப்டம்பர் மாதம் 7ம் தேதியாகும். நமது எதிரிகள் இந்த தினத்தை பெரும் ஆரவாரத்துடன் கொண்டாடுவர். இந்த நாட்களில் இவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து நபிமொழியில் உள்ள முன்னறிவிப்பை நிறைவு செய்து விட்டனர். மேலும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை இந்த பிரிவுகளிலிருந்தும் இவர்களே தனியாக விலக்கி வைத்து விட்டார்கள். பெரும் கூச்சலுடனும் ஆரவாரத்துடனும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. மாநாடுகளை நடத்துவார்கள். ஊர்வலங்களை நடத்துவார்கள். ஜமாஅத்தை ஏசுவர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு எதிராக மிகவும் தரக்குறைவான காட்டுமிராண்டித்தனமான செயல்களில் ஈடுபடுகின்றனர். இவையெல்லாம் கத்முன் நுபுவ்வத்தின் பெயரில் நடக்கின்றது. இந்த வருடம் ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் வரை தங்களது இழிவான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக முயற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கின்றது. எந்த மக்கள் தங்களது தவறான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இறைவனுக்கு பிரியமான மனிதர்கள் மீது அருள் புரிந்துள்ள அகிலத்திற்கே அருட்கொடையாக அனுப்பப்பட்டவருக்கு அவப்பெயரை உண்டாக்குகின்றனரோ அப்படிப்பட்டவர்களை இறைவன் விரைவாக பிடிப்பதற்கான வழிவகையை ஏற்படுத்துவானாக!

இந்த வாரத்தில் கராச்சியில் மேலும் இரண்டு சஹாதத்துகள் நிகழ்ந்துள்ளன. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். பாகிஸ்தானை அல்லாஹ் விரைவில் அஹ்மதிகளுக்கு சுதந்திரமாக இருப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் துஆ செய்யுங்கள்.

கானாவைச் சேர்ந்த நமது பெரியவர் ஒருவரது ஜனாஸா ஹாஸிர் தொழுகையையும் நான் தொழ வைப்பேன். மேலும் இந்த இரண்டு சஹீதுகளின் ஜனாஸா காயிப் தொழுகையையும் இத்துடன் சேர்த்து தொழ வைப்பேன். ஒரு ஜனாஸா ஹாஸிர் இருப்பதால் நான் வெளியே சென்று ஜனாஸா தொழுகையைத் தொழ வைப்பேன். சகோதரர்கள் இங்கு பள்ளிவாசலிலேயே ஸஃப்பை சீராக வைத்தவாறு எனக்கு பின்னால் தொழ வேண்டும்.

வஃபாத் ஆன கானாவைச் சேர்ந்த நமது நண்பரான பெரியவரின் பெயர் ஆதம் பின் யூசுஃப் சாஹிப் ஆகும். புற்றுநோய் இவருக்கு இருந்தது. ஆகஸ்டு 30ம் தேதி தமது 84வது வயதில் இவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

1956 ஆம் ஆண்டு தமது 27வது வயதில் இவர்கள் பைஅத் செய்தார்கள். பைஅத் செய்த பிறகு இவர் தமது தொழிலை விட்டு விட்டார். தப்லீக் செய்ய ஆரம்பித்தார். அவர்கள் கானாவின் முழு பகுதியிலும் தப்லீக் செய்துள்ளார்கள். மேலும் பெரும்பாலான இடங்களில் ஜமாஅத்தை நிறுவியுள்ளார்கள். பழைய ஜமாஅத்துகளை துடிப்புடன் செயல்பட வைப்பதில் இவருக்கு குறிப்பான பங்கு இருந்தது. இவரது தப்லீக் மூலம் நூற்றுக்கணக்கான மக்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டனர். தப்லீகில் இவருக்குள்ள ஆர்வத்தால் கானாவில் இவரது பெயரே Yousuf Preacher என்று ஆகி விட்டது. மர்ஹூம் 2003ம் ஆண்டில் U.K. வந்தார்கள். இங்கும் தனது தப்லீக் பணிகளை அவர் தொடர்ந்து செய்து வந்தார். குறிப்பாக ரேடியோ நிகழ்ச்சிகளின் மூலம் இவர் தப்லீக் செய்து வந்தார். அவற்றில் Voice of Africa –வும்

WVLS Radio ஆகியவை குறிப்பிடத் தகுந்தவையாகும். தனது Region -ன் தப்லீக் செயலராக இவர் இருந்து வந்தார். 2001 ஆம் ஆண்டில் ஹஜ் செய்வதற்கான நற்பாக்கியமும் இவருக்கு கிடைத்தது. 2005 ஆம் ஆண்டில் காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான நல்வாய்ப்பும் இவருக்கு கிடைத்தது. மிகவும் நல்ல மனிதராகவும், தொழுகை, நோன்பு ஆகியவற்றைப் பேணுபவராகவும் தூய உள்ளம் கொண்டவராகவும் இவர் இருந்தார். கிலாஃபத்துடன் மிகவும் ஆழமான அன்பின் தொடர்பு இருந்து வந்தது. மர்ஹூம் வஸிய்யத் செய்தவராவார். இவருக்கு இரண்டு மனைவிகளும் 10 மகள்களும் உள்ளனர். அல்லாஹ் இவரது பதவியை உயர்த்துவானாக! இவரது சந்ததிகளில் அஹ்மதிய்யத் எப்போதும் நிலைத்திருக்கட்டும்!

சஹீதுகளில் ஒருவர் கராச்சியைச் சேர்ந்த டாக்டர் செய்யது மன்சூர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான டாக்டர் செய்யது தாஹிர் அஹ்மது சாஹிப் ஆவார்கள். ஆகஸ்டு 31ம் தேதி இவர் சஹீதானார். ஆகஸ்டு 31ம் தேதி வழக்கம் போல் இவர் தமது கிளினிக்கில் அமர்ந்திருந்தார்கள். நோயாளிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்த தருணத்தில் 2 ஆண்களும் 2 பெண்களும் நோயாளிகள் போன்ற தோற்றத்தில் கிளினிக்கிற்குள் நுழைந்தனர். இவர்களில் ஒரு ஆண், டாக்டர் சாஹிப் மீது Firing செய்தார். 6 தோட்டாக்கள் டாக்டர் சாஹிப் மீது பாய்ந்தது. டாக்டர் சாஹிபின் மனைவி குண்டு வெடிக்கும் சத்தத்தைக் கேட்டார். சாதாரணமாக வழக்கம்போல் நடைபெறும் துப்பாக்கிச் சத்தம் என்று அவர் நினைத்தார். கராச்சியில் எல்லா நேரமும் துப்பாக்கிச்சூடு நடந்து கொண்டே இருக்கும். ஆனால் இவரது அண்டை வீட்டுக்காரர் துப்பாக்கி சுடும் சப்தம் கேட்டு வெளியே வந்தார். அப்போது கிளினிக்கிலிருந்து நான்கு பேர்கள் ஓடுவதை அவர் பார்த்தார். அவர் கிளினிக்கிற்கு உடனடியாக வந்து பார்த்த போது டாக்டர் சாஹிப் இரத்த வெள்ளத்தில் தரையில் விழுந்து கிடப்பதைப் பார்த்தார். அவர் டாக்டர் சாஹிபை உடனடியாக ஒரு வண்டியில் வைத்து மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். ஆனால் டாக்டர் சாஹிப் வழியிலேயே சஹாதத்தின் பானத்தை அருந்தி விட்டார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

சஹீது மர்ஹூமின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் அவரது தாத்தாவான மதிப்பிற்குரிய ஹகீம் ஃபஸ்ல் இலாஹி சாஹிப் மூலமாக கிடைத்தது. இவருக்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் காலத்தில் ஜமாஅத்தில் பைஅத் செய்து இணைவதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. அவரது தாத்தா குஜரான்வாலா மாவட்டத்தைச் சேர்ந்த தல்வண்டி என்ற ஊரைச் சேர்ந்தவராவார். 1970 ஆம் ஆண்டு இவரது தாத்தா கராச்சிக்கு சென்று விட்டார். சஹீதான சமயத்தில் சஹீது மர்ஹூமின் வயது 55 ஆகும். அவர்கள் இன்டர் வரை கல்வி கற்றார்கள். அதற்கு பிறகு Mechanical Engineering -ல் Associate Engineering -ன் டிப்ளமோவை பெற்றார். பிறகு கராச்சி பல்கலைக்கழகத்திலிருந்து B.H.M.S. Degree பெற்றார். National Oil Refinery -ல் ஏறக்குறைய 30 ஆண்டுகள் பணிபுரிந்து வந்தார். 3 ஆண்டுகளுக்குப் பிறகு இவர் Retire ஆக இருந்தார்கள். சஹாதத் சமயம் வரை ஹன்டி ஹல்காவின் தஃவத்தே இலல்லாஹ் செயலராக தொண்டாற்றக்கூடிய நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. இதற்கு முன்பும் பல்வேறு பொறுப்புகளில் இவர் தொண்டு செய்து வந்துள்ளார். மர்ஹூம் மிகவும் தூய்மையான இயல்பின் எஜமானராக இருந்தார்கள். சிரித்த முகத்துடன் காணப்படுவார். சமாதானத்தை விரும்புபவராகவும் இனிமையாகப் பழகுபவராகவும் இருந்தார். இவரது தொடர்புகள் மிகவும் விரிவாக இருந்தது. மிகவும் கண்ணியமிக்க நபராக இருந்தார். அவர் சஹீதான போது முஹல்லாவைச் சேர்ந்த மக்கள் பெரும் எண்ணிக்கையில் துக்கம் விசாரிப்பதற்காக அவரது வீட்டில் ஒன்றுசேர்ந்தனர். உறவினர்களுடன் மிகவும் நல்ல தொடர்பு இருந்தது. எவராவது அவருக்கு அநீதியிழைத்தாலும் அதைக் கண்டும் காணாமல் விட்டு விட்டு சமாதானத்திற்காக தமது கையை நீட்டுவார்கள். அவர்கள் ஒரு வெற்றிகரமான ஹோமியோ டாக்டர் ஆக இருந்தார்கள். மிகவும் விரிவான நிலையில் நோயாளிகளின் எண்ணிக்கையும் மிகவும் அதிகமாக இருந்தது. பலமுறை இவ்வாறு நிகழ்ந்துள்ளது. அவர்கள் தமது அலுவலகத்திலிருந்து சோர்வுடன் வீடு திரும்புவார்கள். வீட்டிற்கு வந்ததும் அங்கு நோயாளிகள் வந்திருப்பார்கள். உடனடியாக அவர்களுக்கு சிகிச்சை செய்யத் தொடங்கி விடுவார்கள். தொழுகைகளைப் பேணுபவராகவும் முறையாக தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும் அவர் இருந்து வந்தார். மிகவும் busy ஆக இருக்கும் நிலையிலும் தமது ஹல்காவின் சுற்றுப் பயணங்களை மேற்கொள்வதில் லஜ்னா தலைவியாக இருந்த இவரது மனைவிக்கு இவர்கள் ஒத்துழைப்பு கொடுத்து வந்தார்கள். மிகவும் அன்புள்ள தந்தையாகவும் குழந்தைகளின் படிப்பு மற்றும் தர்பிய்யத் ஆகியவற்றின் பக்கம் கவனம் செலுத்துபவராகவும் இவர்கள் இருந்தார்கள். மதிப்பிற்குரிய செய்யிதா தாஹிரா தாஹிர் சாஹிபா இவரது மனைவி ஆவார்கள். இவருக்கு மூன்று மகன்கள் உள்ளனர். மூத்த மகன் ரிஸ்வான் தாஹிர். இவரது வயது 32. இரண்டாவது மகன் பர்ஹான் தாஹிர். இவரது வயது 29. மூன்றாவது மகன் முஜ்தபா தாஹிர். இவருக்கு வயது 19 ஆகும். சுபா உஸ்மான், ருபாஹ் தாஹிரா ஆகிய இரு மகள்களும் உள்ளனர். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக! சஹீது மர்ஹூமின் பதவியை உயர்த்துவானாக!

இரண்டாவது சஹீது மதிப்பிற்குரிய மலிக் யாகூப் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான மலிக் இஃஜாஸ் அஹ்மது சாஹிப் ஆவார்கள். கராச்சியிலுள்ள ரங்கி டவுனின் வசித்து வந்தார். செப்டம்பர் மாதம் 4ம் தேதி இவர் சஹீதானார். செப்டம்பர் மாதம் 4ம் தேதி ஏறக்குறைய 10.45 மணிக்கு இவர் சஹீதானார். சஹீது மர்ஹூம் தமது சகோதரரான மதிப்பிற்குரிய மலிக் ரஸாக் அஹ்மது சாஹிப் அவர்களுடன் சேர்ந்து குத்தகைக்கு எடுக்கின்ற பணிகளைச் செய்து வந்தார். இருவரும் வீட்டிலிருந்து தங்களது Factory க்கு செல்வதற்காக தனித்தனி மோட்டார் சைக்கிளில் புறப்பட்டனர். தனது சகோதரருக்கு பின்னால் சற்று தொலைவில் சஹீது மர்ஹூம் இருந்தார்கள். வழியில் நின்று கொண்டிருந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் இவருக்கு அருகில் வலது புறமாக வந்து இவரது காதிற்கு அருகில் துப்பாக்கியால் சுட்டனர். தோட்டா தலையில் நுழைந்து வெளியே வந்து விட்டது. அந்த இடத்திலேயே அவர் சஹீதாகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். சம்பவம் நடந்த பிறகு தாக்குதல் நடத்தியவர்கள் மோட்டார் சைக்கிளில் ஏறி தப்பி ஓடி விட்டனர். பின்னால் வந்த ஒரு காரின் ஓட்டுனர் தாக்குதல் நடத்தியவர்கள் இரண்டு இளைஞர்கள் ஆவர் என்று கூறினார். முன்னால் அமர்ந்திருந்தவர் ஹெல்மெட் அணிந்திருந்தார். மிகச் சிறிய தாடியை உடைய இளைஞராக அவர் இருந்தார்.

சஹீது மர்ஹூமின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் அவரது கொள்ளு தாத்தாவான மியான் அஹ்மது சாஹிப் மூலம் கிடைத்தது. இவர் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் காலத்தில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் மதிப்பிற்குரிய சவுத்ரி குலாம் ரஸூல் பஸ்ரா சாஹிப் அவர்களின் தப்லீகின் தாக்கத்திற்கு ஆளாகி பைஅத் செய்த போது பெசாவரிலுள்ள ஜோடா தலான் என்ற இடத்தில் வசித்து வந்தார்கள். பிறகு எதிர்ப்பு இருந்ததால் மதிப்பிற்குரிய சவுத்ரி குலாம் ரஸூல் பஸ்ரா சாஹிபின் ஆலோசனைக்கேற்ப சர்கோதாவிற்கு வந்து விட்டார். இவரது குடும்பத்தினர்க்கு ஜமாஅத்திற்கு அதிகமாக தொண்டு செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. அங்குள்ள பள்ளிவாசலைக் கட்டுவதிலும் இவரது தந்தையார் பெரும் பங்கு வகித்துள்ளார். மர்ஹூமின் தந்தையாரான மலிக் யாகூப் அஹ்மது சாஹிபின் வயது 90 ஆகும். அல்லாஹ்வின் அருளால் இவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள். சஹீது மர்ஹூமின் தாயார் வஃபாத் ஆகிவிட்டார்கள். 1990 ஆம் ஆண்டில் இவர்கள் சர்கோதாவிலிருந்து கராச்சிக்கு வந்து விட்டனர். இவர்களது மச்சானான மதிப்பிற்குரிய முஹம்மது நவாஸ் சாஹிப் அவர்களும் சஹீதாவார்கள். கடந்த வருடம் செப்டம்பர் மாதம் இவர் சஹீதானார். தமது மச்சானுடன் இவர்கள் கராச்சிக்கு வந்து விட்டார்கள்.

சஹீது மர்ஹூம் மிகவும் தூய உள்ளம் கொண்ட அனைவரையும் நேசிக்கின்ற அனுதாப உணர்வுடன் நடந்து கொள்கின்ற மனிதர் ஆவார்கள். எல்லாரிடமும் மகிழ்ச்சியுடன் சந்திப்பார்கள். எவரது உள்ளத்தை உடைப்பதையும் அவர்கள் விரும்பமாட்டார்கள். எல்லாரிடமும் மிகுந்த அன்புடன் நடந்து கொள்வார்கள். தமது பிள்ளைகளுடன் மட்டுமின்றி தனது சகோதரர்களின் பிள்ளைகளுடனும் மிகுந்த அன்புடன் நடந்து கொள்வார்கள். இவர்களுடன் வசித்து வந்த இவரது பிள்ளைகளும் ஜமாஅத்திற்காக மிகுந்த தன்மான உணர்வு உடையவர்களாக இருந்து வந்தனர். எந்தவொரு சஹாதத்தைப் பற்றி கேள்விப்பட்டாலும் தங்களது உள்ளத்தல் அதன் ஆழமான தாக்கத்தை உணர்ந்தனர். ஜமாஅத் அமைப்பிற்கு முழுமையாக கட்டுப்பட்டு நடக்கக்கூடியவர்களாக அவர்கள் இருந்தார்கள். எந்தவொரு பணி தொடர்பாகவும் அவரிடம் கூறப்பட்டால் உடனடியாக மகிழ்ச்சியுடன் அதை செய்வார்கள். கடந்த வருடம் தனது மச்சானான முஹம்மது நவாஸ் சாஹிப் அவர்கள் சஹீதான சமயத்தில் இவர் மீண்டும் மீண்டும் அந்தோ! இந்த சஹீதாகும் பாக்கியம் எனக்கு கிடைத்திருக்க வேண்டுமே என்று மீண்டும் மீண்டும் இவர் கூறிக் கொண்டிருந்தார். சஹீது மர்ஹூமின் வயது 36 ஆகும். இவர் தனக்குப் பின்னால் தனது தந்தையான மலிக் யாகூப் சாஹிப் அவர்களைத் தவிர மனைவி மதிப்பிற்குரிய ராஸிதா இஃஜாஸ் சாஹிபா அவர்களையும் ஒரு மகளான நூர் இஹ்ஜாஸ் சாஹிபா அவர்களையும் – இவருக்கு 12 வயதாகிறது, இரண்டு மகன்களான ஜவாஸ் அஹ்மது – வயது 10, முர்தஸா இஃஜாஸ் – வயது 8 ஆகியோரை விட்டுச் சென்றுள்ளார். அல்லாஹ் மர்ஹூமின் பதவியை உயர்த்துவானாக! அவரது பிள்ளைகளுக்கும் பொறுமையை மேற்கொள்ளும் நல்வாய்ப்பை வழங்குவானாக! மேலும் அவர்களின் பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at **BAIT-UL-FUTUH Mosque,** London

on **06.09.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,

TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456